சார்பு நீதிமன்றம், பெருந்துறை

**OS.NO**.26/2018

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 02 ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 02.03.2026

**Dw1 (ஈஸ்வரமூர்த்தி)**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

எனது வழக்கிற்கு ஆதரவாக கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன்.

**1)** 2.2.2023 தேதியிட்ட Additional Inspector General of Registration என்பவரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை **பிசாஆ 4.** (வாதி வழக்கறிஞர் ஆட்சேபணையுடன்)

**குறுக்கு விசாரணை( வாதி தரப்பில்)**

நான் பிசாஆ 4 சுற்றறிக்கை குறித்து எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் சுமார் 2 மாதங்களுக்கு முன்பு தெரிந்து கொண்டேன். சுற்றறிக்கையில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் கட்டளைகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிசாஆ 4 தாக்கல் செய்ய வேண்டியதற்கு நோக்கம் என்ன என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் வாதி கிரயம் செய்து கொள்வதாக சொன்னார், நான் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுப்பதாக சொல்லி அந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொடுத்தேன். அதற்காக முன்னிலைபடுத்தியுள்ளேன். சாட்சிய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு மாறாக ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகளுக்கு முரணாக நான் சாட்சியம் அளிக்க முடியாது என்றும் எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தம் 2017 ம் ஆண்டு போடப்பட்டது என்றால் சரிதான். பிசாஆ 4 2.2.2023 ல் சுற்றறிக்கை தேதியிடப்பட்டு அது 2.3.2023 ல் வெளியிடப்பட்டது என்றும் அந்த சுற்றறிக்கை பலனை நான் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் பதிவாளர் அலுவலகம் சென்று தான் சுற்றறிக்கை பற்றி தெரிந்து கொண்டேன். எனது கூடுதல் சாட்சியம் மற்றும் கூடுதல் ஆவணம் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.03.02 16:11:27 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS